IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியப் பாடல்களில் மனித மேம்பாடு

# Human Development in Sanga Literary Hymns

பேரா க.விரராகவன். உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

திருவேற்காடு சென்னை -77. (சென்னைப் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**Abstract :**

The life and prosperity of the Tamil people have been recorded in history as literature. Any event in the world that takes place in history means that it has reached a state of excellence. In that way, the life of Tamils is also recorded in history. Without leaving them all at the literary level, in the growing civilized world, man goes through various evil ways and falls into many tribulations. Due to this, his society also gets a bad reputation. For the purpose of doing all these, the man who lived as a nomad was made to live permanently in one place. The man who started living in this way started living as a community by establishing the relationships of father, mother, brother and sister. Even though there are many ethnic groups in the world, the reason why the Tamils prevail is because of their kindness towards other living beings. The Tamil considered his sense of self as his life. He lived happily with the things he had without regard for selfishness and let others live happily. Even when he did business, he sold things in an honest manner and made money, but he never deviated from the law by lusting after things. The aim of this article is to highlight the ideas embodied in the sangha songs and guide the following generations in such a way that they lived a better life.

**Keywords :** Sangam Period, People, Agriculture, Selflessness, Commerce, Humanity, Personality.

**ஆய்வுச்சுருக்கம் :**

தமிழரது வாழ்வும் வளமும் வரலாற்றில் இலக்கியங்களாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. உலகில் நடைப்பெறக்கூடிய எந்தவொரு நிகழ்வாயினும் வரலாற்றில் இடம்பெறுகின்றது என்றால் சிறப்பான நிலையை எட்டியிருந்தது என்பதே பொருள். அந்த வகையில் தமிழரது வாழ்வும் வரலாற்றில் இடம்பெற்றிருப்பது உவகை. அவற்றை எல்லாம் இலக்கிய நிலையிலேயே விட்டுவிடாமல் வளர்ந்து வரும் நாகரீக உலகில் மனிதன் பல்வேறு தீய வழிகளில் சென்று பல இன்னல்களுக்கு ஆட்படுகின்றான். இதனால் அவனது சமுதாயத்திற்கும் அவப்பெயர் ஏற்படுகின்ற

சூழல் நேரிடுகின்றது. இவற்றையெல்லாம் களையும் நோக்கத்தில் நாடோடிகளாக வாழ்ந்த மனிதனை நிலையாக ஓரிடத்தில் ஓரிடத்தில் தங்கி வாழச்செய்தது வேளாண்மை தொழில் அவ்வாறு வாழ ஆரம்பித்த மனிதன் அப்பா, அம்மா, அண்ணன், தங்கை என்ற உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு ஒரு சமூகமாக வாழ ஆரம்பித்தான். உலகில் பல இனத்தவர்கள் வாழ்ந்திருந்தாலும் கூட தமிழன் மேலோங்கி நிற்பதற்கு காரணம் பிற உயிர்களிடத்தே இரக்கமுள்ள மனிதனாக நடந்து கொண்டதன் காரணமே தவிர வேறொன்றும் இல்லை. தமிழன் தன்மான உணர்வினை தன் உயிர் போன்று கருதினான். தன்னலம் கருதாது தம்மிடம் உள்ள பொருட்களை கொண்டு தாமும் இன்பமாக வாழ்ந்து பிறரையும் இன்பமாக வாழ வைத்தான். வாணிபம் செய்த போதும் கூட நேர்மையான முறையில் பொருட்களை விற்று பொருளீட்டினானே தவிர ஒருபோதும் பொருள் மீது ஆசை கொண்டு நீதிநெறி தவறி நடக்கவில்லை. இவ்வாறாக மேம்பட்ட வாழ்வினை தமிழர் வாழ்ந்தனர் என்பதை சங்கப் பாடல்களில் பொதிந்துள்ளக் கருத்துக்களை அடையாளங் கண்டு எடுத்துக்கூறி பின்வரும் சந்ததியினரை நல்வழிப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**முக்கிய வார்த்தைகள் :** சங்க காலம். மக்கள், வேளாண்மை, தன்னலம் இல்லாமை, வாணிபம், மனிதநேயம், தன்மானம்,குணநலன்.

**முன்னுரை :**

மனித பிறவியின் மேன்மையை உணர்ந்த ஔவையார் "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றுக் குறிப்பிட்டுள்ளார். அப்படிப்பட்ட மனிதப் பிறவியில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது சிறப்பல்ல இப்படித்தான் வாழவேண்டுமென ஒரு கொள்கையோடு வாழ்வதே சிறப்பாகும். இறைவனைப் புகழ்ந்து பாடுவதும் அவனது அடியவர்களுக்கு பணி செய்வதுமே பேரின்பம் என்ற உயர்ந்தக் கொள்கையோடு 81 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த திருநாவுக்கரச பெருமானே "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று குறிப்பிடுகின்றார். சங்க கால மனிதனோடு ஒப்பிட படுகின்ற போது தற்கால மனிதன் என்ன தான் நாகரீக உலகில், நாகரீக வாழ்க்கையை வாழ்ந்தாலும் கூட அவனது மேன்மையை எட்டிவிட முடியாது என்பது தற்கால மனிதன் வாழ்வினை பார்க்கும் போது அறிந்து கொள்ள முடியும்.

**வேளாண்மை :**

கற்காலத்தில் நடோடிகளாக அங்கும் இங்குமாக வாழ்ந்த மனிதன் சங்க காலத்தில் நிலையான வாழ்வை அமைத்துக்கொள்ள அடித்தளம் அமைத்ததும் அவனது வாழ்வில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்ததும் வேளாண்மைத் தொழிலாகும். இத்தகைய வேளாண்மை மரங்களின் இலையினையே ஆடையாக உடுத்தி வாழ்ந்த மனிதனை துணியால் ஆன ஆடையை அணிய வைத்தது, எந்தவொரு இடத்திலும் நிலையாக வாழாதவனை நிலையாக ஓரிடத்தில் வாழ வைத்தது, திருமணம் என்ற ஓர் பந்தத்தினைத் ஏற்படுத்தி கணவன், மனைவி, தாய், தந்தை, அண்ணன், அண்ணி, தம்பி, தங்கை.... எனப் பல உறவுமுறைகளைக் கொடுத்ததோடு பண்பாடுள்ள நாகரீகமுள்ள மனிதனாக மாற்றியது.

வேளாண்மை என்பது தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலத்தின் கண்ணும் நடைப்பெற்றது. என்றாலும் பொரும்பாலும் முறையாக

நடைப்பெற்றது மருத நிலத்தின் கண்ணும் சிறுபான்மை அவ்வவ் நிலத்தின் தன்மையைப் பொருத்தும் நடைப்பெற்றது. வேளாண்மை செய்வதற்கு அடிப்படை நிலம் இத்தகைய நிலம் நன்செய் நிலம், புன்செய் நிலம் என இரண்டு வகைப்படும். வேளாண் பாhi; வயில் நிலம் என்று சொல்லப்படுவது நிலத்தை மட்டும் குறிப்பதன்று. நீர் இல்லையேல் நிலம் பயனற்றுப் போகும் என்பதையுணர்ந்த பொரியோர் "நிலன் எனப்படுவது நிலத்தோடு நீரே" என்று குறிப்பிட்டுள்ளனர்.

**மருதநில வேளாண்மை :**

ஒவ்வொரு நிலத்தின் கண்ணும் அவ்வவ்மக்கள் செய்யக்கூடிய தொழிலினை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டது அந்த வகையில் மருத நிலத்தின் தலைமக்கள் உழவன், உழத்தியர் என்று அழைக்கப்பட்டனர் என்பதைப் தொல்காப்பியர்

**"ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை**

**ஆனா வகைய திணை நிலைப பெயரே" (தொல்-பொரு-22)**

உழவுத்தொழில் செய்யக்கூடிய ஆண்களுக்கு உழவன் என்றும், பெண்களுக்கு உழத்தியர் என்றும் அவரவர் செய்யக்கூடியத் தொழிலினை அடிப்படையாகக் கொண்டு பெயர் அமைந்துள்ளதால் இது தொழிலாகுபெயராக வந்தமைந்துள்ளது. உழவுத்தொழிலின் மேன்மையை உணர்த்த வள்ளுவர் கூட உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர் மற்றவரெல்லாம் அவரின் உதவியால் வாழ்பவர் என்று கூறுவதை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்பவர் மற்றெல்லாம்**

**தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள்-1033)**

என்ற குறட்பாவின் வழி அறிந்து கொள்ளலாம். இவ்வுழவர்கள் பற்றி அகநானூற்றுப் பாடலாசிரியர்களான பரணர்(266) மற்றும் நக்கீரர்(346) மனிதன் வயலில் சென்று உழைத்ததன் காரணமாக வாழ்வில் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்தான் என்று குறிப்பிடுவதை அவர்களது அகனானூற்றுப் பாடல்வரி மூலம் அறிந்து கொள்ளலாம்.

**"கழனி உழவர் கலிசிறந்து எடுத்த" (அகம்.266 )**

**"கள்ஆர் உவகைக் கலிமகிழ் உழவர்" (அகம்.346)**

**மனித நேயம் :**

மானிட வாழ்வின் ஈரந்தேய்ந்த மன பண்பினை ஆங்கிலத்தில் "Humanism" என்றும் தமிழில் "மனிதநேயம்" என்றும் குறிப்பிடுவர். ஒவ்வொரு நாளின் விடியற்காலையிலும் வீட்டு வாசலில் அரிசி மாவினால் கோலமிட்டு வீட்டினை அலங்கரிப்பதோடு, எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்கு உணவளிக்கும் அறிவார்ந்தப் பண்பினை சங்கத் தமிழர் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் தான் வருகின்ற வழியில் படர்ந்து வாழ்வதற்கு இடமில்லாமல் இருந்த முல்லைக் கொடியைக் கண்ட மன்னன், தன் தேரினையே அக்கொடி படர்வதற்கு விட்டுச் சென்றதனையும், குதிரைப் பூட்டப்பட்டத் தேரில் தலைவியைக் காணும் ஆவலில் விரைவாக சென்று கொண்டிருக்கும்போது தேரில்

கட்டப்பட்டுள்ள மணியின் ஓசை வழியிலுள்ள பூக்களில் தேனுண்ணுகின்ற வண்டினங்களுக்கு இடையூராக இருக்குமென்று எண்ணி மணியின் நாவினை கட்டி தேரினை ஓட்டச் சொல்லிய தலைவனையும், தன் கன்று இறந்ததற்காக நீதிக்கேட்டப் பசுவிற்கு தன்மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மன்னனையும், புறாவிற்கு ஈடாக தன் தொடை தசையினை வேடனுக்கு அறுத்துக் கொடுத்தவர் என பல மனிதநேயப் பண்பாளர்களைக் கண்டது தமிழர் சமுதாயம்.

நிலையில்லாத இவ்வுலகில் நிலையாக வாழவேண்டுமெனில் தம் புகழை நிலை நிறுத்துதற்குறிய செயல்களை ஆராய்ந்துப் பார்த்து செய்தல் வேண்டும் என்பதை கீழ்காணும் பாடல்வரி மூலம் அறிந்து கொள்ளலாம்..

**“மன்னன் உலகத்து மன்னுதல் குறித்ததோர்**
**தம்புகழ் நிறீஇத் தாம் ஆய்ந்தனரே” (புறம்.165:1-2)**

மனிதன் உயர்ந்த குறிக்கோளோடு வாழ்தல் வேண்டும் ஒருவேளை தன் குறிக்கோளில் தோற்றுப்போனாலும் கூட, கவலையுற்று ஓய்ந்து விடாமல் இருக்க வேண்டும். காட்டிலுள்ள விரைவாக ஓடும் முயலினை வேட்டையாட நினைத்து ஓய்ந்துப் போவதை விட, வலிமையான யானையை வேட்டையாட எண்ணி தோற்றுப்போவதே மேல் என்பார் வள்ளுவப் பெருந்தகை.

**“கான முயலெய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது” (குறள் - 772)**

உலகில் பல்வேறு மொழியினைப் பேசக்கூடிய மக்களுந்தான் வாழ்ந்துள்ளனர், வாழ்கின்றனர் ஆனால் அவர்களெல்லாம் தமிழருக்கு ஈடாக உயர்த்திப் பேசப்படுவதில்லை. தமிழர் இவ்விடத்தில் தடம் பதித்தனர் எனின் தமது வாழ்வியல் முறையை உருவாக்கி அதனை அவன் பின்பற்றியதே காரணமாகும்.

அறம், புகழ், இன்பம் ஆகிய இம்மூன்றும் சோம்பேரிகளாக உள்ளவரிடத்து என்றுமே தவறிக்கூட சென்று சேர்வதில்லை என்பதைக் கீழ்க்காணும் நற்றிணைப் பாடல்வரி வெளிப்படுத்துகின்றது..

**“இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசைவுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இனமென**
**வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை” (நற்.பா.214:1-3)**

**தன்மான உணர்வு :**

தன்மானம் என்பதை மனிதன் தன் உயிர் போன்று கருதினான். ஒருபோதும் பிறறது உழைப்பில் வாழ்தல் கூடாது அப்படி வாழ நேரிட்டால் தன் வாழ்வைப் பற்றி பிறர் எள்ளி நகையாட தாமே வழிவகை செய்துக் கொடுப்பதைப் போன்று ஆகிவிடும் என்று வறுமையில் வாடினாலும் பிறரது உழைப்பில் வாழக்கூடாது என்பதை நன்கு உணர்ந்திருந்தான். இந்த தன்மான உணர்வு ஒருவரது

ஆழ்மனதில் பதிந்துவிட்டால் ஒவ்வொருவரும் பிறரை சாராமல் வாழத் துணிந்து விடுவர். தாமே சுயமாக முடிவெடுக்கும் சுதந்திரத்தையும் பெற்று விடுவர்.

சங்க காலத்தில் வீட்டில் தன் உழைப்பால் கிட்டிய உணவு கூழாக இருந்தாலும் சரி அமிழ்தமாக கருதி மனமகிழ்வோடு உண்டனர். பிறரால் கிடைத்த செல்வம் தங்களது வீட்டில் உயர்வைத் தருவதில்லை என்றெண்ணும் உயர்ந்தக் குணத்தை பண்டைத்தமிழர் பெற்றிருந்தனர் என்பதை

**“தம் இல் தமது உண்டு அன்ன சினைதொறும்**

**தீம் பழம் தூங்கும் பலவும்.......”** **(குறுந்.பா.83:3-4)**

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

**தன்னலம் இல்லாமை :**

தம்மிடம் உள்ள பொருட்களைக் கொண்டு தாம் மட்டும் இன்பமுடன் வாழ வேண்டும் என்ற தன்னலம் குணம் இல்லாதவர் சங்கத்தமிழர். தம்மிடம் உள்ளப் பொருட்களை பிறருக்குக் கொடுத்து அவர்களது இன்பத்திலே தன் இன்பத்தைக் கண்டனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

**“கடாஅ யானைக் கலிமான் பேக**
**பசித்தும் வாரேம் பாரமு மிலமே**
**இன்னா துறைவி யரும்படர் களைமே”** **(புறம்.பா.145:3-5)**

புலவர் ஒருவர் தாம் கொண்டு வந்தப் பொருளை இவர் உறவினர் உறவினரல்லாதவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற எந்தவித வேறுபாடும் இன்றி அனைவருக்கும் பகிர்ந்துக்கொடு என்று மனைவியிடம் கூறும் பொதுநலத்தை புறனானூற்றுப் பாடலின் மூலம் அறிந்துக்கொள்ளலாம்.

**“இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது,**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி-மனைகிழ வோயே! ”** **(புறம்.பா.163:5-7)**

தனக்கென வாழாது பிறருக்கென வாழும் பண்புடையவர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் இன்னும் அழியாமல் இருப்பதாக புறனானூற்றுப் பாடல்வரி குறிப்பிடுகின்றது.

**“தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே”** **(புறம் -182:7-8)**

தம்மிடம் உள்ளவற்றை தாம் மட்டுமே உண்ணாது பிற உயிர்களிடத்தும் அன்பு கொண்டு அவற்றிற்கும் பகிர்நத்ளித்து உண்ணும் பண்பே தலைச் சிறந்த அறமாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”** **(குறள்-322)**

**வாணிபம் :**

மனிதனது வாழ்வை மேன்மையடைய செய்வனவற்றுள் உழவுத்தொழிலை அடுத்து வாணிபமும் ஒன்றாகத் திகழ்கின்றது. வாணிபம் என்பது தங்களிடம் உள்ளப் பொருளைப் பிறரிடம் கொடுத்து அவர்களிடம் உள்ளப் பொருளைப் பெற்றுக் கொண்டு விற்பனை செய்வது ஆகும். இத்தகைய பண்டமாற்று முறை ஒரு நாட்டிற்குள்ளேயும், வெவ்வேறு நாட்டிற்கிடையேயும் நடைப்பெற்றது. வாணிபம் எவ்வாறு நடைப்பெற்றது என்றாலும் கடல் கடந்து சென்று வாணிபம் செய்வது பெண்களுக்கு இல்லை என்பதை

**“ முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை ”** **(தொல்-காப்-34)**

என்று தமிழ்மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் குறிப்பிடுவதைக் கொண்டு வாணிபம் நாட்டிற்குள்ளே மட்டுமின்றி கடல் கடந்தும் வாணிபம் நடைப்பெற்றது என்பதை அறிந்துக் கொள்ளலாம்.

பண்டைக் காலதத்தில் தங்களிடம் உள்ள தேன், நெய், கிழங்கு ஆகியவற்றைக் கொடுத்து அதற்குப் பதிலாக மீன், நெய், மது ஆகியவற்றைப் பெற்றுச் சென்றதையும், இனிய சுவையுடைய கரும்பு, அவல் ஆகியவற்றைக் கொடுத்தவர்கள் அதற்குப் பதிலாகப் மான் இறைச்சியையும், கள்ளையும் பெற்றுச் சென்ற செய்திகளையெல்லாம் பொருநராற்றுப்படையின் பாடல்வரி மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

**“தேன் நெய்யோடு கிழங்குமாறி யோர்**
**மீன் நெய்யோடு நறவு மறுகவும்”** **(பொரு.ஆ.ப.21-22)**
**“தீம் கரும்போடுஅவல் வகுத்தோர்**
**மான் குறையோடு மது மறுகவும்”** **(பொரு.ஆ.ப.216-217)**

சங்க கால மக்கள் காவிரிப்பூம்பட்டினத்தின் வீதிகளில் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்கள் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்தனர். இமய மலையில் கிடைத்த உயர் பொன் வகைகளையும், விலைமதிக்க முடியாத மாணிக்கங்களையும், மேற்குத்தொடர்ச்சி மலையில் கிடைத்த அகிற் சந்தனக் கட்டைகளையும், விற்பனை செய்ததோடு தெற்குக் கடல் பகுதியில் கிடைத்த முத்துக்களையும், கீழ்க்கடலில் விளைந்த பவளங்களையும், கங்கை மற்றும் காவிரி ஆற்று நீரினால் விளைந்த செல்வங்களும் விற்பனை செய்ததை பட்டினப்பாலையின் வழி அறியலாம்.

**“நீரின் வந்த நிமிர் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும், காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்**

**அரியவும் பெரியவும் நெரிய ஈண்ட" (பட்டினப்பாலை 185 -192)**

**வணிகரின் குணநலன் :**

வணிகத்திற்கு இலக்கணம் கூறும் வள்ளுவர் பிறர் பொருளையும் தம் பொருள் போன்று ஒரே தன்மையாக கருத வேண்டுமென்று குறிப்பிடுகின்றார், என்பதை காண்கின்ற பொழுது வணிகத்திற்கு தேவை மிகவும் நடுநிலையோடு இருக்கும் பண்பு என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்" (குறள்.120)**

சங்க காலத்தில் தமிழர்கள் வணிகத்தை சுயநலம் கருதாது, சமுதாய நலம் கருதியே செய்து வந்தனர். பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அவர்கள் வணிகம் செய்யவில்லை. உற்பத்தி செய்யும் பொருட்கள் கிடைக்காத இடங்களுக்கு வண்டிகளில் ஏற்றிச் சென்று விற்பனை செய்து தாங்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும், தங்களது பொருட்களை வாங்கும் மக்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் எனக் கருதினர். பொய் சொல்லி பொருட்களை விற்காமல் வெளிப்படையாக உண்மை விலையை கூறி பண்டங்களை விற்பனை செய்தனர். அப்படி விற்பனை செய்கின்ற பொழுது பொருளைக் குறைத்துக் கொடுக்காமலும் அவர்களிடமிருந்து அதற்குரிய விலையை கூட்டி வாங்காமலும் நடுநிலைமையோடு வணிகம் செய்தனர் என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

**"நெடு நுகத்துப் பகல் போல**

**நடுவு நின்ற நல் நெஞ்சினோர்,**

**வடு அஞ்சி வாய்மொழிந்து,**

**தமவும் பிறவும் ஒப்ப**

**கொள்வதூஉம் மிகை கொடாது,**

**கொடுப்பதூஉங் குறைகொடாது" (பட்டினப்பாலை 206 – 210)**

அறநெறி தவறாது வணிகம் செய்தவரை மதுரைக்காஞ்சி

**"அற நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி" (மதுரைக்கா பாடல்வரி 500)**

என்று குறிப்பிடுகின்றது.

**முடிவுரை :**

கரடு முரடான கற்காலத்தில் நாகரிகமற்று ஆடையின்றி அங்கும் இங்குமாகத் திரிந்த மனிதனை நிலையாக ஓரிடத்தில் வாழ வைத்ததோடு திருமணம் என்ற ஓர் பந்தத்தை ஏற்படுத்தி பலவித உறவுமுறைகளைக் கொடுத்தது வேளாண்மை. இத்தகைய வேளாண்மையை மேற்கொணட் மனிதன் ஒருபோதும் துன்பத்தில் சுழன்றது இல்லை. மனமகிழ்ச்சியோடு இன்பமாக வாழ்ந்தான். தமிழர்கள் வணிகத்தை சுயநலம் கருதாது சமுதாய நலம் கருதியே செய்து வந்தனர். பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பொய் சொல்லி பொருட்களை விற்காமல் உண்மை விலையைக் கூறி, பொருளைக் குறைத்துக் கொடுக்காமலும் அவர்களிடமிருந்து அதற்குரிய விலையை கூட்டி வாங்காமலும் நடுநிலைமையோடு வணிகம் செய்தனர். தான் மட்டும் மகழ்ச்சியாக வாழ்ந்தால் போதாது தன்னைச் சுற்றியுள்ள உயிர்களும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற ஈர மனப்பான்மை உள்ளம் கொண்டவராகவும் காணப்பட்டனர். தமக்குக் கிடைக்கக்கூடிய இன்பமும் பிறரால் ஏற்படுதல் கூடாது, தம் முயற்சியால் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற தன்மான உணர்வோடும், தன்னலம் இல்லாமலும் வாழ்ந்து. வாழ்வில் உயர்வதற்குறிய வழிகளை ஒவ்வொன்றாக தேர்ந்தெடுத்து அவற்றைப் பின்பற்றி வாழ்ந்ததோடு பிற்கால சந்ததிகளுக்கும் வழிகாட்டும் விதமாக வரலாற்றில் இடம்பிடித்தலுக்குரிய பண்பாட்டோடு கூடிய நாகரிகமான வாழ்க்கையைத் தமிழர் வாழ்ந்தனர்.

**பார்வை நூல்கள் :**


1. புலியூர்க் கேசிகன் நற்றிணை மூலமும் உரையும் பாரி நிலையம் 90 பிராட்வே சென்னை – 08 (2018)
2. புலியூர்க் கேசிகன் குறுந்தொகை மூலமும் உரையும் பாரி நிலையம் 90 பிராட்வே சென்னை – 08 (2014)
3. புலியூர்க் கேசிகன் அகநானூறு மூலமும் உரையும் பாரி நிலையம் 90 பிராட்வே சென்னை – 08 (2017)
4. வித்வான் நாராயண பிள்ளை பத்துப்பாட்டு மூலமும் உரையும் மூல நிலையம் சென்னை (1994)
5. கதிர் முருகு பத்துப்பாட்டு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை. (2016)
6. புலியூர் கேசிகள் திருக்குறள் புதிய உரை பூம்புகார் பதிப்பகம் 127 பிரகாசம் சாலை, சென்னை 08 (2010)
7. இளம்பூரணர் தொல்காப்பியம் பொருளதிகாரம் கழக வெளியீடு சென்னை (1969)


**References :**


1. Puliyurkesigan Narrinai moolamum uraiyum Paari nilaiyam 90 Bradway Chennai – 08 (2018)
2. Puliyurkesigan Kurunthogai moolamum uraiyum Paari nilaiyam 90 Bradway Chennai – 08 (2014)
3. Puliyurkesigan Agananooru moolamum uraiyum Paari nilaiyam 90 Bradway Chennai – 08 (2017)
4. Vidwan Narayana Pillai Paththuppattu Moolamum uraiyum Moola Nilaiyam Chennai (1994)
5. Kathirmurugu Paththuppattu Moolamum uraiyum Saratha Pathippagam Chennai. (2016)
6. Puliyurkesigan Thirukkural Puthiya urai Poombukar Pathippagam 127 Pirakasam Salai Chennai – 08 (2010)
7. Elambooranar Tholkappiyam Porulathikaram Kazhaga Veliyeedu Chennai (1969)